بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/03/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## தவ்ஹீதின் பின்னணியில் மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்களின் ஈமானை வலுப்படுத்தும் குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ ـ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ ـ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝٦ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝٧

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் பின்னணியில் தவ்ஹீத் குறித்துக் கூறப்பட்டு வருகிறது. மக்கா வெற்றியின் போது, சிலைகளை வீழ்த்தியது பற்றிய விளக்கம் கடந்த குத்பாவில் வந்து விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் இவையனைத்தையும் தவ்ஹீதைப் பறைசாற்றும் விதமாக, நீங்கள் வணங்குகின்ற சிலைகளின் நிலை இதுதான் என உணர்த்தும் விதமாக செய்தார்கள். தாயிஃப் மக்களுடைய 'லாத்' சிலையைப் பற்றி இப்படி ஓர் அறிவிப்பு கிடைக்கிறது: அவர்கள் லாத் சிலையை மூன்று ஆண்டுகள் வரை தகர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். மாநபி (ஸல்) அவர்களுக்குத் தவ்ஹீத் மீதிருந்த தன்மானம், இந்தத் தவறான முன்மொழிவுக்கு இணங்கவில்லை. தாயிஃப் மக்கள், (அடுத்தடுத்து) ஓராண்டு வரை, பிறகு ஒரு மாதம் வரை அந்த சிலையைத் தகர்க்க வேண்டாம் என பரிந்துரைகளை முன்வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளாமல், அந்த சிலையை வீழ்த்தச் செய்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்து இணைவைப்பாளர்களை எதிர்கொண்டு, கஅபாவை சிலைகளை விட்டும் தூய்மைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, முஸ்லிம்களின் உள்ளங்களிலும் தவ்ஹீதை ஆழமாகப் பதியச் செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபாவுடைய உள்ளங்களில் ஷிர்க்குக்கான எந்தவொரு எண்ணமும் ஏற்படாத வகையில் அவர்களுக்கு உயரிய தர்பிய்யத் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மின்பரில் கூறக் கேட்டதாக அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கிறிஸ்தவர்கள் (ஈஸா) மஸீஹைப்

புகழ்வதில் மிகைப்படுத்தியது போன்று, என்னைப் புகழ்வதில் மிகைப்படுத்தாதீர்கள். நானோ இறைவனின் அடியான் மட்டுமே ஆவேன். எனவே, (என்னை) இறைவனின் அடியார் மற்றும் அவனுடைய தூதர் என்று (மட்டுமே) கூறுங்கள்."

ஒரு தருணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் உங்கள் முன்னோர்களின் மீது ஆணையிடுவதை விட்டும் அல்லாஹ் உங்களைத் தடுக்கின்றான். எவரேனும் ஆணையிட்டுக்கூற வேண்டுமானால், அல்லாஹ்வின் மீது ஆணையிடட்டும்; அல்லது மௌனமாக இருக்கட்டும்."

ஓரிறைமைக்கு எதிராக எந்த ஒரு விஷயத்தையும் சிறிதேனும் வைப்பதையும் நபி (ஸல்) அவர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு சஹாபி மாநபி (ஸல்) அவர்களிடம், 'போரில் எதிரி எனது கையை வெட்டிவிட்டு, பிறகு, உடனடியாக கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்பதாக அறிவித்தால், நான் அவனைக் கொல்லலாமா?' என்று கேட்டார். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள், "இல்லை, அவரைக் கொல்லாதீர்" என்று கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் மேலும் விளக்கமாக, "அவர் கலிமா கூறிய பிறகு நீர் அவரைக் கொன்றால், அவர் (கலிமாவின் காரணமாக) உம்மை விடச் சிறந்த நிலையிலும், நீர் அவரை விடத் தாழ்ந்த நிலையிலும் ஆகிவிடுவீர்கள்" என்று கூறினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* ஆக, பழைய சஹாபா எத்தனை பேர் இருந்தார்களோ அவர்களும் இத்தகைய செயலை செய்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை வன்மையாகக் கண்டித்தார்கள். ஆனால் இன்றைய ஆலிம்களின் நிலையைப் பாருங்கள்! பாகிஸ்தானில், அஹ்மதிகள் கலிமா கூறும் நிலையிலும், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எல்லையே இல்லை. அந்த அநீதியாளர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இந்த (ஹதீஸ்) அறிவிப்பில் தீர்ப்பளித்து விட்டார்கள். எவ்வாறாயினும், இப்பொழுது அந்த நாட்டின் பயங்கரவாத மௌலவிகளுக்குப் பின்னால் செல்லும் மக்கள் இதனைச் சிந்திக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களைப் பற்றி நான் மிக அதிகமாக அஞ்சுவது, (பகட்டு) பிறருக்குக்காட்டுதல் எனப்படும் மிகச் சிறிய இணைவைப்பைக் குறித்துதான். கியாமத் நாளில் மக்களுக்கு அவர்களுடைய செயல்களுக்குக் கூலி வழங்கப்படும்போது, அல்லாஹ் (பிறருக்குக் காட்டுவதற்காக அமல் செய்த) அந்த மக்களிடம், 'நீங்கள் எவர்களுக்குக் காட்டுவதற்காக உலகில் அமல் செய்தீர்களோ அவர்களிடமே செல்லுங்கள்; அவர்களிடம் சென்று உங்களுக்கு (அதற்கு) ஏதேனும் கூலி கிடைக்கிறதா என்று பாருங்கள்' என்று கூறுவான்.

கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் கூறுகிறான்: ஆதமின் மகன் என்னைப் பொய்ப்பிக்கிறான், என்னை அவமதிக்(க முயற்சி செய்)கிறான்; ஆனால், இது அவனுக்குத் தகாது.'

தான் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதை மறுப்பதே அவன் அல்லாஹ்வைப் பொய்ப்பிப்பதாகும். ஆனால், அவனை முதன்முறை படைத்தது போன்றே, மீண்டும் படைப்பதும் அல்லாஹ்வுக்கு எளிதானது. அல்லாஹ்வுக்கு மகன் இருப்பதாகக் கொள்கையைக் கொண்டிருப்பதே அவன் அல்லாஹ்வை அவமதிப்பதாகும். உண்மையில், அல்லாஹ் அனைத்துத் தேவைகளுக்கும் அப்பாற்பட்டவனும், தேவையற்றவனும், தனித்தவனும் ஆவான்.

சூரா இக்லாஸுக்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:- அல்லாஹ் கூறுகிறான்: "அவனே அல்லாஹ். அனைவரும் அவனுடைய தேவையுடையவர்கள். ஆனால், அவன் எவருடைய தேவையும் அற்றவன்." ஒரு வரி அளவுகூட இல்லாத இந்த சிறிய வாக்கியம், (எந்த மூலப் பொருளுமின்றி படைக்கும்) படைப்பாளன் எல்லா விதமான இணைவைப்பிலிருந்தும் தூய்மையானவன் என்பதை எவ்வளவு நுட்பமாகவும், அழகாகவும், எடுத்துரைக்கிறது என்று பார்க்க வேண்டும்".

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பெருமானார் (ஸல்) அவர்கள் சூரா இக்லாஸை சுலுசுல் குர்ஆன், அதாவது, திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்கள். இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதன் உள்ளடக்கம் (இந்த சூரா இக்லாஸின் உள்ளடக்கம்) சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தது. திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களைப் படிக்கும்போது, இறுதி காலத்தில் தஜ்ஜாலிய குழப்பம் மற்றும் யஃஜூஜ் மஃஜூஜ் குழப்பம் ஆகிய இரு பெரும் குழப்பங்கள் ஏற்படவிருந்தது புலனாகிறது.

இந்த இரண்டு குழப்பங்களும் ஒன்றன் பின் ஒன்றாக இஸ்லாத்துடன் மோதவிருந்தன. ஒரு குழப்பம் ஓரிறைவனுக்குப் பதிலாக தந்தையாகிய இறைவன் {பிதா/கர்த்தர் (அதாவது, அல்லாஹ்)}, மகனாகிய இறைவன் {சுதன்/ இயேசு (அதாவது, ஈஸா (அலை) அவர்கள்} மற்றும் தூய ஆவியாகிய இறைவன் {பரிசுத்த ஆவி/ ஆவியானவர் (அதாவது, வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள்} என முக்கடவுள் கொள்கையைக் கொண்டுள்ளது. மற்றொரு குழப்பம் இறைமறுப்பு (நாத்திகம்) ஆகும். அதாவது, அவர்கள் இறைவனை அடியோடு மறுக்கிறார்கள். திருக்குர்ஆன் இவ்விரு குழப்பங்களின் கொள்கைகளையும் வன்மையாக மறுத்துரைத்துள்ளது. திருக்குர்ஆன் தந்தையாகிய இறைவனின் (அதாவது, ஓரிறைவனின்) இறைத்தன்மையை நிலைநாட்டியுள்ளது. மகனாகிய இறைவன் மற்றும் தூய ஆவியை வன்மையாக மறுத்துரைத்து நிராகரித்துள்ளது. இவ்வாறு திருக்குர்ஆன் மூன்று கடவுள்களில், ஓரிறைவனின், அதாவது, ஈடுஇணையற்ற ஒரே இறைவனின் உண்மையான இறைத்தன்மையை நிலைநாட்டியுள்ளது.

தந்தையாகிய இறைவனை உண்மைப்படுத்துவது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி என்பது தெளிவான விஷயம். எனவேதான், இந்த சூரா இக்லாஸ் திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாக அமைகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உறுதியான தவ்ஹீத் நபியின் மூலமாக மட்டுமே கிடைக்க முடியும். [எ.கா.] நம்முடைய நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயிரக்கணக்கான விண்ணின் அடையாளங்களைக் காட்டி அரேபியாவின் இறைமறுப்பாளர்களையும், மார்க்கமற்றவர்களையும் இறைவன் இருக்கிறான் என நம்ப வைத்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இன்று, இந்தக் காலத்தில், யாஜூஜ் மாஜூஜும் தஜ்ஜாலும் ஒரு புறமிருக்கட்டும்; முஸ்லிம்களிடையே கூட உண்மையான தவ்ஹீத் குறித்த புரிதல் இல்லை. எனவே, இக்காலத்தில் மாநபி (ஸல்) அவர்களின் ஊழியரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் வரவேண்டியிருந்தது; அவர்கள் வந்தார்கள்; மேலும், தவ்ஹீதுக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஒவ்வொரு தாக்குதலையும் முறியடித்தார்கள். நாம் உண்மையான தவ்ஹீதை ஏற்பவர்களாக இருக்கும்போதுதான், நம்மால் உண்மையான பைஅத்துக்கான உரிமையை செலுத்த முடியும்.

தவ்ஹீதின் உயர்நிலை குறித்து ஒருமுறை ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம், ‘இறைவா! நான் உன்னை நினைவு கூரவும் செய்கின்ற வகையில், உன்னிடம் துஆவும் செய்கின்ற வகையில் உள்ள ஒரு விஷயத்தை எனக்குக் கற்றுத் தருவாயாக’ என்று வேண்டினார்கள். அதற்கு இறைவன், ‘மூஸாவே! லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவீராக’ எனக் கூறினான். இதைக் கேட்ட ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், ‘இறைவா! உன் அடியார்கள் அனைவரும் இதைத்தான் கூறுகிறார்கள்’ என்று கூறினார்கள். அப்பொழுது இறைவன் இதே கலிமாவைக் கூறுமாறு மீண்டும் பணித்தான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் வற்புறுத்தியதன் பேரில் அல்லாஹ் அன்னாரிடம், ‘மூஸாவே! என்னைத் தவிர உலகின் அனைத்துப் பொருட்களையும், ஏழு பூமிகளையும் தராசின் ஒரு தட்டிலும், லா இலாஹ இல்லல்லாஹ் என்பதை இன்னொரு தட்டிலும் வைத்தாலும், லா இலாஹ இல்லல்லாஹ் எல்லாவற்றையும் விட கனமானதாக இருக்கும்’ என்று கூறினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மத் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவைக் கூறுவதனால், பாவங்கள் அகன்று விடுகின்றன என்பதுதான் தூய நபி (ஸல்) அவர்களின் போதனையாகும். இறைவனை மட்டும் ஒருவனாகவும், இணையற்றவனாகவும் அறிந்து, முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை, தனித்தவனான அந்த வல்லோனே அனுப்பினான் என்று ஈமான் கொள்பவர்

அந்தக் கலிமாவிலேயே இறந்து விட்டார் என்றால், அவர் ஈடேற்றம் அடைந்து விடுவார் என்பது முற்றிலும் உண்மையாகும். இதுவே உறுதியான உண்மைத்துவமாகும்.

ஒரு சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவர் ஒருவர், 'அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவருமில்லை; அவன் தனித்தவன், அவனுக்கு எவரும் இணையில்லை; ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள்; ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அவனுடைய அடியாரும், அவனுடைய அடியாளின் மகனும் ஆவார்கள்; மேலும், அவன் மர்யமுக்கு இறக்கிய அவனுடைய கலிமாவும், அவன் புறமிருந்து ஓர் ஆன்மாவும் ஆவார்கள்; மேலும், சொர்க்கம் மற்றும் நரகம் உண்மையானவை என நான் சான்று பகர்கிறேன்' என்று கூறினாரோ அவரை அல்லாஹ் சொர்க்கத்தின் எட்டு வாயில்களில் (அவர்) விரும்பும் வாயில் வழியாக நுழையச் செய்வான்."

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தவ்ஹீதை எடுத்துரைத்து, அதனை உம்மத்தின் உள்ளங்களில் பதியவைக்க முயற்சி செய்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் கூற்றுப்படி, இறைவனின் மகத்துவத்தை எடுத்துரைப்பதில் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, எவ்வளவு பேரார்வம் இருந்தது என்றால், அதை எதிரிகளும் ஒப்புக்கொண்டனர்.

ஒரு பிரஞ்சு வரலாற்றாசிரியரும் எழுதுகிறார்: உலகத்தை அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளச் செய்வது ஒன்று மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது என்ற அளவுக்கு, அன்னார் தாம் நபி என்று அறிவித்த நாள் முதல், இறக்கும் வரை, அவர்களது நாவில் எப்பொழுதும் அல்லாஹ்வை நினைவு கூர்தல் இருந்து வந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறப்பு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், மாநபி (ஸல்) அவர்கள் மீது நமக்கு எவ்வளவு அளவற்ற அன்பு இருந்தாலும், எல்லா நிலைகளிலும், அல்லாஹ்வின் மேன்மை பெருமானார் (ஸல்) அவர்களின் சிறப்பை விட மிகவும் மேலானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் என்றென்றும் நிலைத்திருப்பவன் ஆவான்; முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுடைய பேரருட்களில் ஒரு மாபெரும் அருட்கொடையாவார்கள். இறைவனுடைய அந்தஸ்த்து பறிக்கப்படுகின்ற வகையிலான ஓர் உயர்த்தரத்தை நாம் மாநபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினால், அது பெருமானார் (ஸல்) அவர்களுடன் நாம் பகைமை பாராட்டுவதாக ஆகி விடும் {நஊதுபில்லாஹ்}.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தவ்ஹீதை நிலைநாட்டுவதை எந்த அளவுக்கு கவனத்தில் கொண்டிருந்தார்கள் என்றால், அன்னாரது இறுதி மூச்சின் போது கூட, அன்னாருடைய அருளுக்குரிய நாவில் இருந்து மீண்டும் மீண்டும் இந்தச் சொற்களே வெளிவந்தன: “தங்களுடைய நபிமார்களின் அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக மாற்றிக் கொண்ட யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களை இறைவன் தூற்றுவானாக!” நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் இதையே கூறி வந்தார்கள்.

“எனக்கு ஷிர்க்கான அந்தஸ்தை வழங்கிவிடாதீர்கள்” என்பதே மாநபி (ஸல்) அவர்கள் சமுதாயத்துக்கு வழங்கிய இறுதி அறிவுரையும், இறுதி தூதுச் செய்தியுமாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நாம் தவ்ஹீதின் உண்மைத்தன்மை பற்றிய புரிதலை உருவாக்கிக் கொண்டு, தவ்ஹீதை நிலைநாட்டுவதற்கு நபி (ஸல்) அவர்களுக்கு இருந்த வேதனையை உணர்ந்து, அதற்காக முழு முயற்சி செய்து, உண்மையான ஒன்றிறைவாதியாக ஆக வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! (ஆமீன்)

*குத்பாவின் இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானுக்கு எதிராகப் போரின் மூலமாக, உலகத்தின் மீது, குறிப்பாக, இஸ்லாமிய நாடுகளின் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்புகின்றன. இதனால் சூழ்நிலை மேலும் மோசமாகி வருகிறது. நடுவில் அரபு நாடுகளுக்கும் இழப்புகள் ஏற்படுகின்றன. முஸ்லிம்கள் இந்தச் சூழலைப் புரிந்து கொண்டு ஒற்றுமையாக வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இந்த வகையிலும் அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! இஸ்லாமிய நாடுகளை ஒற்றுமையின் சரடில் கோர்க்கவும் நல்வாய்ப்பு வழங்குவானாக! (ஆமீன்)

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**